

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மே 25, 2017 | புரட்சி 16 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00

# இந்தித் திணிப்பை எதிர்ப்போம்! இழந்துவரும் உரிமைகளை மீட்போம்!

இந்தியாவின் எத்தனையோ மாநிலங்களில் நமது தமிழ்நாட்டுக்குத் தனித்த சிறப்புகள் பல உண்டு. நம்மை வழி நடத்திய தலைவர்கள் நமக்காக போராடிப் பெற்றுத் தந்த உரிமைகள்தான் அதற்குக் காரணம். ஒரு காலத்தில் நமது நாட்டுக்குப் பெயர் 'சென்னை மாகாணம்' என்பதுதான். அண்ணா முதலமைச்சராக வந்த பிறகு நாம் நமது நாட்டை 'தமிழ்நாடு' என்று அறிவித்துக் கொண்டோம்.

இந்தியாவின் ஆட்சி மொழி இந்தி என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனாலும் நமது தமிழ்நாட்டின் எல்லைக்குள் இந்திக்கு இடமில்லை என்று அறிவித்து, தமிழும் ஆங்கிலமும் எமக்குப் போதும் என்ற இரு மொழிக் கொள்கையை உருவாக்கிக் கொண்டோம்.

பார்ப்பனிய ஜாதி அமைப்பு, ஒருவனை மேல் ஜாதி; ஒருவனைக் கீழ் ஜாதி என்று பாகுபடுத்தியது. படிக்கவும், பதவிக்கு வரவும் 'கீழ்ஜாதி'களுக்கு உரிமை இல்லை என திமிராட்டம் போட்டது. அதை சுக்குநூறாக உடைத்தெறிந்து, அனைவருக்குமான கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளுக்காக, இட ஒதுக்கீடு சட்டங்களை உருவாக்கிக் கொண்டோம். அந்த சமூகநீதிதான் நமக்கான பண்பாடு. எந்த ஆதிக்கத்துக்கும் நமது தமிழ்நாடு பணிந்து போகாது. உண்மைதான்; நாம் வளர்ந்திருக்கிறோம். ஆனாலும் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லையே என்ற கவலை நம் எல்லோருக்கும் உண்டு.

இப்போது என்ன நடக்கிறது?

இந்தியாவின் அதிகாரத்தில் இருக்கும் பாஜக நமது உரிமைகளை பறிக்கிறது. பண்பாட்டில் குறுக்கிடுகிறது.

இந்தியாவிலேயே இந்தியை எதிர்த்து முதல் போர்க்கொடியை உயர்த்தியது யார்? நாம் தான். 1938ஆம் ஆண்டிலேயே பெரியார் போர்ச் சங்கு ஊதினார். 'இந்தியைத் திணித்தால் எங்களுக்கு இந்தியாவே தேவையில்லை' என்று முழங்கினார். ஆனால் இப்போது, தமிழ்நாட்டிற்குள் மைல் கற்களில், மத்திய அரசு அலுவலகங்களில், மத்திய அரசுப் பள்ளிகளில், விமான நிலையங்களில், வானொலியில் இந்தி தீவிரமாக நுழைகிறது. நாடாளுமன்றத்தில் இந்தித் தெரிந்தவர்கள் இந்தியில் மட்டுமே பேசுவார்களாம்.

தமிழ்நாட்டைத் தனிமைப்படுத்துகிறார்கள். இந்தி படித்தால்தான் வேலை கிடைக்கும் என்கிறார்கள் சிலர். அப்படியானால் இந்தியைப் புறக்கணித்த நமது நாட்டுக்குள் இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து பல லட்சம் பேர் வேலை தேடி வருவது ஏன்? அதே நேரத்தில் தமிழ்நாட்டின் மத்திய அரசு அலுவலகங்களிலும் இரயில்வேத் துறையிலும் வடநாட்டுக்காரர்கள் குவிந்து கொண்டிருக்கிறார்கள்.

பேச்சு வழக்கில் இல்லாத, கோவில்களில் மட்டுமே முடங்கியுள்ள, பார்ப்பன பண்பாட்டு மொழி சமஸ்கிருதம். அதைப் பரப்புவதற்கு கோடிகோடியாக வாரி வழங்குகிறார்கள். அய்.அய்.டி.யிலிருந்து அரசுத் தொலைக்காட்சிகள் வரை சமஸ்கிருதம் கொடி கட்டிப் பறக்கிறது.

மதுரைக்கு அருகே கீழடி கிராமத்தில் அகழ்வாராய்ச்சி நடந்தது. நமது தமிழ் இனம் சங்க காலத்தில் ஜாதி மத அடையாளமின்றி வாழ்ந்தது என்பதற்கான சான்றுகள் தடயங்கள் ஏராளமாகக் கிடைத்தன. நமது பண்பாட்டு அடையாளங்களை உறுதிப்படுத்தும் இந்த ஆராய்ச்சிப் பணிகளை முடக்கிப் போடுகிறது பாஜக ஆட்சி.

நமது கல்வி கட்டமைப்பையும் சீர்குலைக் கிறார்கள். நீட் தேர்வை திணிக்கிறார்கள். இந்தியா விலேயே இதை எதிர்த்துப் போராடுகிற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். நமது வரிப் பணத்தில் உருவாக்கிய மருத்துவக் கல்லூரிகளில் அய்ம்பது சதவீத இடங்களை 'அகில இந்திய' கோட்டா என்கிற பெயரில் அபகரித்துக் கொள்கிறார்கள்.

'புனித' நதி என்று கூறி கங்கையை சுத்தப்படுத்த இருபத்தையாயிரம் கோடி பணம் ஒதுக்குகிறார்கள். ஆனால் வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் நமது விவசாயிகளை அவமதிக்கிறார்கள்; கடன் தள்ளுபடி செய்யக்கூட மறுக்கிறார்கள். பன்னாட்டு கம்பெனிகளுக்கோ பல லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி. அதுமட்டுமா? 'மீத்தேன்' எடுக்கிறோம், 'ஹைட்ரோகார்பன்' எடுக்கிறோம் என்று நமது விவசாய நிலங்களைப் பாழ்படுத்துகிறார்கள். நாம் துடிக்கிறோம்! போராடுகிறோம்!



வங்காளிகளும் குஜராத்திகளும் தங்களுக்கு வேண்டாம் என்று மறுத்துவிட்ட ஆபத்தான அணுமின் திட்டங்களை நம் மீது திணிக்கிறார்கள்.

ஜெயலலிதா முதலமைச்சர் பதவியில் இருந்தபோது அவரிடம் பணிந்து நின்றது நடுவண் பாஜக ஆட்சி. அவரது மரணத்திற்குப் பிறகு ஆட்சியை மிரட்டி கொள்ளைப் புறவழியில் தமிழகத்தில் காலூன்றத் துடிக்கிறார்கள்.

உணவு உரிமையைக்கூட மறுக்கிறார்கள். பார்ப்பனர்களையும் சைவ உணவுக்காரர்களையும் மாமிசம்தான் சாப்பிட்டாக வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் குறைந்த விலையில் புரதச்சத்துடன் கிடைக்கும் மாட்டுக்கறி உணவை சாப்பிடவே கூடாதாம்; தடைபோடுகிறது பாஜக.

இன்னும் ஏராளம் பட்டியலிடலாம்.

வடக்கே பரவி நிற்கும் காவிப் பண்பாடு அம் மாநிலங்களில் வாழும் மக்களை கீழ்நிலையிலேயே வைத்திருப்பதை அங்கே நேரில் போய் பார்க்கும் எவருக்கும் புரியும்.

ஆனால் நமது பண்பாடோ சமூகநீதிக்கானது. நமது மக்கள் கடவுள் மத நம்பிக்கை கொண்டவர் களாக இருந்தாலும் ஒருபோதும் சமூகநீதியை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

அகில இந்திய கட்சிகளைப் புறக்கணித்தவர்கள் நாம். நமக்குள் ஆயிரம் வேறுபாடுகள் மோதல்கள் இருந்தாலும், நமதுநாட்டில் உருவாகி நமது சமுதாயத்தில் மலர்ந்த கட்சிகளை மட்டுமே அதிகாரத்தில் அமர்த்தி வருகிறோம். இதுவே நமது அரசியல் வரலாறு.

**நமக்கான கல்வி;**

**நமக்கான மொழி உரிமை;**

**நமக்கான பண்பாடு;**

**நமக்கான விவசாயம்;**

**நமக்கான உணவு;**

**நமக்கான அரசியல்;**

**அத்தனையும் பறிக்க – அழிக்க பார்ப்பனீயக் காவிப் படை துடித்துக் கொண்டு நிற்கிறது.**

**விழித்தெழுவோம்! தடுத்து நிறுத்துவோம்! தமிழர்களே வாரீர்!**

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

## ஜூன் 4 – தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு மாநாடு
## ஜூன் 5 – மத்திய அரசு பெயர்ப் பலகையில் இந்தி அழிப்புப் போராட்டம்

# சென்னையில் இரு பெரும் நிகழ்ச்சிகள்




நடுவண் பா.ஜ.க. ஆட்சியின் இந்தித் திணிப்பைக் கண்டித்து ஜூன் 5ஆம் தேதி சென்னை சாஸ்திரி பவனில் உள்ள மத்திய அரசு அலுவலகப் பெயர்ப் பலகையில் உள்ள இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் நடத்த இருக்கிறது.

போராட்டத்துக்கு முதல் நாள் ஜூன் 4ஆம் தேதி சென்னையில் "இந்தித் திணிப்பை எதிர்போம்; இழந்து வரும் உரிமைகளை மீட்போம்" எனும் முழக்கத்தை முன் வைத்து திறந்த வெளி மாநாடு நடக்கிறது. சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மாநாட்டுப் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு வருகிறார்கள்.

திருவான்மியூர் – தெப்பக்குளம் மைதானத்தில் இந்தி எதிர்ப்பு போராளிகள் "தாளமுத்து–நடராசன் நினைவு அரங்கில்" மாநாடு நடைபெறுகிறது. கலை நிகழ்ச்சிகள், பறை இசையுடன் தொடங்கும் மாநாட்டில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் கழகத் தலைவர், பொதுச் செயலாளரும் பங்கேற்கிறார்கள். தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு மாநாடு என்று மாநாட்டுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. சென்னை நகர் முழுதும் மாநாடு – போராட்டத்தை விளக்கி சுவரெழுத்துகள் எழுதப்பட்டுள்ளன.

4ஆம் தேதி மாநாட்டிலும் அடுத்த நாள் போராட்டத்திலும் பங்கேற்க தமிழகம் முழுதுமிருந்தும் கழகத் தோழர்கள் திரண்டு வருகிறார்கள். மாநாடும் போராட்டமும் தமிழகம் தழுவி நடத்துவது என, கழக தலைமைக் குழுவில் முடிவு செய்யப்பட்டது. 4ஆம் தேதி இரவு தோழர்கள் தங்குவதற்கு திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் காலூன்ற துடிக்கும் காவிப் படைகளின் சூழ்ச்சித் திட்டங்களை முறியடித்திட –

இந்தித் திணிப்பை தடுத்து நிறுத்த –

தமிழகம் இழந்து வரும் உரிமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க –

திராவிடர் விடுதலைக் கழகம் இந்த மாநாட்டையும் போராட்டத்தையும் அறிவித்திருக்கிறது.

## தோழர்களே! சென்னைக்கு திரளுவீர்!

# பெரியாரை குற்றக் கூண்டில் நிறுத்தினால் இழப்புகளும் தோல்விகளுமே மிஞ்சும்

*மார்க்சிய சிந்தனையாளரும் இந்திய தத்துவ மரபுகள் குறித்து ஆய்வு நூல்களை எழுதியவருமான பேராசிரியர் ந.முத்து மோகன், ‘உங்கள் நூலகம்’ மாத இதழுக்கு (ஏப். 2017) அளித்துள்ள பேட்டி இது. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

*பெரியாரையும் அம்பேத்கரையும் சமகால இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நிறுத்துகிறோம். அவர்கள் நாத்திகர்கள், அவைதீகர்கள் என்பதாலா? அவ்வாறு நிறுத்துவது நம் சமகாலத் தேவைப் பாடுகளை நிறைவு செய்ய முடியுமா?*

பெரியாரையும் அம்பேத்கரையும் இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நாம் நிறுத்தவில்லை. ஹைதராபாத்தில் ரோஹித் வெமுலாவை, ஜேஎன்யூ மாணவர்களை நாமா இந்துத்துவத்திற்கு எதிராக நிறுத்தினோம். இல்லை, மகாராஷ்டிரம், குஜராத், ஹரியானாவில் தலித்துகள் தாக்கப்பட்டது, தாக்கப்படுவது, அதனால் தலித்துகள் இந்துத்துவத் திற்கு எதிராகப் போராடி வருவது ஆகியவற்றைப் பார்த்தால் நாமாக தலித்துகளை இந்துத்துவத்திற்கு எதிராக நிறுத்தவில்லை. இந்துத்துவமே அவர்களை எதிரிகளாகக் கருதுகின்றது; எதிரிகளாக ஆக்கி வைத்துள்ளது. இதை இந்துத்துவ வாதிகள் சில சமயங்களில் வெளிப்படையாகப் பேசுகின்றார்கள்; சில சமயங்களில் மறைமுகமாகப் பேசுகின்றார்கள். ஆனால் மிகுந்த வக்கிரத்தோடு செயல்படுகின்றார்கள். அதனால் பெரியாரையும் அம்பேத்கரையும் இந்துத்துவ அரசியலுக்கு எதிராக நாம் நிறுத்து கிறோம் என்பது கிடையாது.

ரொம்ப முக்கியமானது, இங்குச் சமூகப் பிரச்சினைகளுக்கு ஒரு சமயப் புனிதம் கொடுத்து வைத்துள்ளார்கள். இப்போது மேற்கத்திய ஆய்வுகளில் பௌத்தம், சீன, ஜப்பானிய மரபுகள் உள்ளிட்டு கீழைநாடுகளின் சமயங்களைக் குறிக்க, dharmic religions என்ற சொல்லைப் பயன்படுத்து கிறார்கள். கிறித்துவத்தையும் இசுலாமையும் குறிக்க abrahamic religions என்ற சொல்லைப் பயன்படுத்து கின்றார்கள். ஆனால் வருணாசிரமத் தர்மம் வருணத் தர்மம், சாதித் தர்மம், சனாதன தர்மம், சுதர்மம், மனுதர்மம் போன்ற கருத்தாக்கங்களை, சொல்லாடல்களை எல்லாம் ஏராளமாகப் பரப்பி, பயன்படுத்தி நிற்கின்ற இந்துத்துவ அரசியல், இந்த தர்மம் என்ற சொல்லையே ரொம்ப கேவலப்படுத்தி வைத்திருக்கிறது.

சமூகப் படி நிலைகளுக்குச் சமயரீதியான புனிதம் கற்பித்தத்தை இந்துத்துவவாதிகள் சுயவிமர்சனம் செய்து கொண்டதே கிடையாது. இந்தப் புனிதம், கற்பித்தல் குறித்து, எந்தவொரு மடாதிபதியோ, எந்தவொரு சங்கராச்சாரியாரோ, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்தவொரு சைவ மடத் தலைவரோ அதிகாரப்பூர்வமாக சுயவிமர்சனம் செய்து கொண்டதே கிடையாது. மத அந்தஸ்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு மடாதிபதியோ, யோகியோ யாராவது ஒரு இந்துமதத் தலைவர், வருணாசிரமம், சாதி வேறுபாடுகள் இந்து மதத்தில் ஏதோ ஒரு காலத்தில் நுழைந்துவிட்டன. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று வெளிப்படையாக, பிசிறுகள் இல்லாமல் சொன்னது கிடையாது. ஏதாவது அக்கன்னா, இக்கன்னா போட்டுத்தான்அவர்கள் சொல்கிறார்களே தவிர, வெளிப்படையாகப் பேசுவது கிடையாது.

ஆகவே அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் தேவை, கால இயல்பு, முக்கியத்துவம் எதில் உள்ள தென்றால், தாங்கள் தேர்ந்துகொண்ட விமர்சனக் கருவி, அதை எந்தளவு கூர்மைப்படுத்தியுள்ளார்கள் என்பது போன்ற மற்ற விசயங்களெல்லாம் ஒருபுற மிருக்க, அவர்கள் தேர்ந்துக் கொண்டு பேசிய பிரச்சினையின் தளத்தில் உள்ளது. அதுவே, அவர்களை இந்துத்துவம் நிராகரிக்கும்படி ஆக்கி விடுகின்றது. அதனால் அவர்களைப் பற்றி நாம் மீண்டும் மீண்டும் பேச வேண்டியதாகவும் உள்ளது.

*பெரியாருக்கு தத்துவப் பார்வை உண்டா? அல்லது நடைமுறை ரீதியாக பார்ப்பனியத்தை, சாதியத்தை, இந்து மதத்தை எதிர்த்த, பார்ப்பனரல்லாத இடைநிலைச் சாதிகளின் நலன்கள் முன்னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியார் சிந்தனையா?*

இந்தக் கேள்வியில், பெரியாருக்குத் தத்துவப் பார்வை உண்டா, இடைநிலைச் சாதிகளின் நலன்கள் முன்னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியார் சிந்தனையா என்ற இந்த இரண்டு சொற்றொடர்களும் மிகக் கடுமையானவையாகப் படுகின்றன.

அந்தோனியா கிராம்சி எல்லோருக்கும் தத்துவப் பார்வைஇருக்கின்றது என்று சொல்வார். தத்துவம் என்பது என்னமோ தலையில் கொண்டை முளைத்தவருக்கு மட்டும்தான். பல்கலைக்கழகப்



படிப்பாளிகளுக்கு மட்டும்தான். பெரிய மேதாவிகளுக்கு மட்டும் தான் என்பதைக் கிராம்சி ஏற்றுக் கொள்ள மாட்டார். அவரைப் பொறுத்த வரையில், அவரது நாட்டுச் சூழலில் கிறிஸ்தவப் பங்குத் தந்தை, பள்ளிக்கூட ஆசிரியர், அந்த வட்டார மக்களை ஒருங்கிணைத்துப் போராடும் செயல்பாட்டாளர்கள் ஆகிய எல்லோருக்குமே தத்துவப் பார்வை உண்டு. ஆகவே தத்துவப் பார்வை ஒரு அபூர்வமான சங்கதி அல்ல. அசாதரணமான ஆற்றல் ஒன்றுமில்லை. ஒரு வகையில் அது சாதாரணப் பார்வைதான். ஆகவே பெரியாருக்கு மிக வலுவான, வளமான தத்துவப் பார்வை உண்டு என்பதை மேலே உரையாடிய வற்றால் அறியலாம்.

இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னிறுத்திய சொல்லாடல்கள்தாம் பெரியாரின் சிந்தனைகள் என்ற குற்றச்சாட்டு திரும்பத் திரும்ப முன்வைக்கப்படுகின்றது. ஒரு கட்டத்தில் இதைத் தோழர் ரவிக்குமார் ஆரம்பித்து வைத்தார். அது தொடர்ந்து பேசப்பட்டது. இந்த இடத்திலும் நீண்ட நெடிய கால வரலாறு கொண்ட பார்ப்பன எதிர்ப்பை உற்றுப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

பார்ப்பன எதிர்ப்பு புத்தர் காலத்தில் தொடங்கி, சாருவாகம் - உலகாயதம், தாந்திரிகம், தாந்திரிக அடிப்படை கொண்ட சித்தர் மரபு, பக்தி மரபு,

**தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னெடுத்ததில் பெரியாரையும் தேர்தல் அரசியல் கட்சிகளையும் பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது.**

இந்தோ - இசுலாமிய மரபு, சந்தர் மரபு, கபீர் மரபு, குருநானக்கினுடைய சீக்கியம் ஆகிய பல இடங்களில் உள்ளன. பல காலங்களில், பல மரபுகளில் பார்ப்பன எதிர்ப்பில் சத்திரியர்கள், வைசியர்கள், கறாராகக் கலைச் சொற்களைக் கொண்டு குறிப்பிட்டால் கைவினைஞர்கள் போன்ற இடைநிலைச் சாதிகள் தாம் முன்னிலை எடுத்து நின்றிருக்கின்றார்கள். கைவினைஞர்களுக்குச் சித்தர் மரபோடு ஒரு நெருங்கிய தொடர்புண்டு. சித்தர் மரபில் தனிப்பட்ட திறன்களை மையப்படுத்துவதால், அதனைக் கைவினைஞர் சிந்தனை என்று சொல்வார்கள். ஆகவே பார்ப்பன எதிர்ப்பு என்பது பார்ப்பனரல்லாத எல்லாச் சாதிகளிடமும் குறைவாகவோ, அதிகமாகவோ இருந்து வந்திருக்கின்றது. அது நீண்ட கால வரலாறு கொண்டது.

ஆகவே, இந்தக் குற்றச்சாட்டு என்பது ஒரு கொடூரமான குற்றச்சாட்டு என்றும் கொள்ள வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. சாதிகளின் மோதல் தளத்தில், இடைநிலைச் சாதி களும் பார்ப்பன எதிர்ப்பு வேலைகளைச் செய்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிலும் இதே மாதிரி நடந்து வந்திருக்கலாம். தமிழ்நாட்டில் சித்தர் மரபுக்கு உள்ள சமூக அடித்தளங்கள் இன்னும் கறாராகக் கண்டறியப்படவில்லை. தமிழ்நாட்டில் பக்தி வடிவத்தின் சிக்கல்களும் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. வைணவத்தில் உள்ள சில தீவிரமான நிலைகள் எல்லாம் எவ்வாறு உருவெடுத்தன. தமிழில் இன்னும் ஆழ்ந்து ஆய்வு செய்ய வேண்டிய வட்டாரங்களெல்லாம் அதிகம் இருக்கின்றன. இது ஒரு பக்கம்.

தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னெடுத்ததில் பெரியாரையும் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற தேர்தல் அரசியல் கட்சிகளையும் பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பிரித்துப் பார்க்காததால், சில சமயங்களில் எல்லாப் பழிகளையும் பெரியார் மீதே சுமத்தி விடுகின்றோம். பெரியாரின் தனிப்பட்ட பண்பு நலன்களே சற்று வித்தியாசமானது. அவை அராஜகப் பண்பு கொண்டவை. இந்த விசயம் பற்றி, எஸ்.வி.ஆரை (எஸ்.வி.ராஜதுரை - பெரியாரிய ஆய்வாளர்) விட, பின்னை நவீனத்துவங்கள் வந்த காலத்தில் தெரிதா, பூக்கோ ஆகியோரை எல்லாம் முன்வைத்து அ.மார்க்ஸ் அதிகம் சிந்தித்துள்ளார். பாரதியிடம் எப்படி ரொமாண்டிக்கான (கற்பனை பெருமிதம்) கருத்துகள் இருந்தனவோ, அப்படி பெரியாரிடம் ஒரு அராஜக வெடிப்புகள் (மூடி மறைத்தல் இல்லாத சுடும் சொற்கள்), தீப்பொறிகள் போல கருத்துகள் வந்து விழும். அவர் தன்னை ஒரு மேட்டுக்குடியாக, அறிவாளியாகக் காட்டிக் கொள்ளவில்லை. பட்டறிவுத் தளத்திலிருந்து பேசிய தெறிப்புகள் அவரிடம் உண்டு.

ஆகவே அவர் திட்டமிட்டு இடைநிலைச் சாதிகளின் நலன்களைப் பற்றிய உணர்வோடு செயல்பட்டார், அவற்றை முன்னிறுத்திப் பேசினார் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அவர் முன் வைத்த விவாதத் தளங்கள் நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்லும் பண்பு கொண்டவை. அந்த விவாதத் தளங்களின் அடிப்படை விரிவுநிலைப் பண்புகள் மிகப் பரந்தவை. அவற்றால்தாம் நம்மிடையே அவர் தொடர்ந்து நிற்கின்றார்.

பெரியாரிடம் தேர்தல் அரசியல் இல்லை. தேர்தல் அரசியல் நலன்களுக்காக, அந்த ஊரில் உள்ள பெரும்பான்மை சாதி எது, அதிலிருந்து ஓர் ஆளை எடுப்பது, அந்தச் சாதி பற்றி பெருமைப்படுத்திப் பேசுவது எல்லாம் பெரியாரிடம் இல்லை. ஆனால் இவையெல்லாம், இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்வைத்துத் தேர்தல் அரசியலைக் கையிலெடுத்த திராவிட இயக்க அரசியல் கட்சிகளிடம் உண்டு. இந்தக் கட்சிகள் இடைநிலைச் சாதிகளை முன்னிறுத்தி, ஆட்களைத் தேர்ந்தெடுத் துள்ளார்கள். ஓட்டு வங்கிகளாக அவர்களைப் பயன்படுத்தியுள்ளார்கள். சில சமயங்களில், சில மோதல்களில் இடைநிலைச் சாதிகளை ஆயுதப் பாணிகள் ஆக்கியுள்ளனர். ஆகவே, பெரியாரையும் தேர்தல் அரசியல் திராவிடக் கட்சிகளையும் பிரித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு பிரித்துப் பார்த்தால் தான் பெரியாரைப் புரிந்து கொள்ள முடியும்; இடைநிலைச் சாதிகளின் நலன்களை முன்னிறுத்திய சொல்லாடல்கள் என்ற குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாது என்று நினைக்கிறேன்.

சாதி, வருணம், பார்ப்பனியம், இந்து மதம் ஆகியவற்றுக்கு எதிராக, வலுவாகப் பெரியார் நின்றிருக்கின்றார். அகில இந்திய அளவில், தமிழ் நாட்டில் மட்டும்தான் ஒரே ஒரு பெரியார் இருந்திருக் கிறார் என்று இன்று உணர முடிகிறது. மதம் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு பெரியாரை நோக்கி ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ஏனென்றால் பெரியார்தான் இந்துப் பெரும்பான்மை வாதத் தேசியத்திற்கு எதிராக வலுவான தளத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார். அவரைச் சின்ன சின்ன குற்றச்சாட்டுகளை முன் வைத்துப் புறக்கணிப்பதில் பயனில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் இழப்புகளை யும் தோல்வி களையும் சந்திக்க வேண்டி வரும் என்று நினைக்கிறேன்.

(தொடரும்)

## ஜூன் 4 சென்னை மாநாட்டு செயல் திட்டங்களை வகுக்க மாவட்டக் கழகம் கலந்துரையாடல்

“தமிழர் பண்பாட்டு பாதுகாப்பு” மாநாட்டிற்கான சென்னை நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 20.05.2017 மாலை 5 மணிக்கு இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டிற்கான அடுத்தகட்ட செயல்பாடுகள், தோழர்களின் மாநாட்டிற்கான பணிகள் என பல்வேறு செயல்பாடுகள் விவாதிக்கப்பட்டன. தபசி குமரன், அன்பு தனசேகரன், வேழவேந்தன், அய்யனார், இரா.செந்தில்குமார் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு தனது கருத்துக்களை கூறினர்.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

# காந்தியின் கபட வாதங்கள்: தோலுரித்தவர் அம்பேத்கர்

காந்தியின் கபட வாதங்களை அம்பேத்கர் எப்படி எதிர் கொண்டார் என்பதை விளக்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி அம்பேத்கர் பிறந்த நாளில் சேலத்தில் ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி:

இட ஒதுக்கீடு என்பதைகூட, பதவி பெறும் நோக்கத்திற்காக அம்பேத்கர் சொல்லவில்லை. அனைத்து சமுதாய மக்களுக்கும், ஆட்சியிலும், அதிகாரங்களிலும் பங்கு இருக்க வேண்டும் என்பதுதான் அதற்கு அவர் கொண்ட பொருள். அவர் சொன்ன முறையும், அவருக்கு பின்னால் வந்தவர்கள் அதை எடுத்துக் கொண்ட முறையும் வெவ்வேறாக இருக்கிறது. நவீனத்துவத்தின் எதிரியாக இருந்தவர் காந்தி. அவருக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்கான அடையாளமாக, மிடுக்கான உடையோடும், பெருமித தோற்றத்தோடும் அம்பேத்கர் இருந்தார். அது அவர் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல. ஆனால், அவருக்கு பின்னால் வந்த தலைவர்கள் அவரை போல் உடைகளை, காலணிகளை அணிவதுதான் அம்பேத்கரியம் என்று கருதிக் கொண்டார்கள். அவர் ஆட்சி அதிகாரத்தை, அரசியல் அதிகாரத்தை சமூக விடுதலைக்கு ஒரு வழியாக மட்டும் வைத்திருந்தார். இப்போது இவர்கள் அதை முடிந்த முடிவாக ஒரே இலட்சியமாக எடுத்துக் கொண்டுவிட்டார்கள். சமுதாயத்தின் மீது அவர் வைத்த பார்வை என்னவாக இருந்தது என்பதில் இருந்துதான் அம்பேத்கரை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய நாட்டின் விடுதலை பற்றி பேசுகிறபோது, இந்திய விடுதலைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு பெரியார் மீதும், அம்பேத்கர் மீதும் உண்டு.

காங்கிரசை எப்போதும் எதிர்த்து வந்த அம்பேத்கர், காந்தியும், காங்கிரசும் தீண்டதகாதவர்களுக்கு செய்தது என்ன? என்று ஒரு புத்தகமாக எழுதி, இந்த மக்களுக்கு காந்தியும், காங்கிரசும் செய்த துரோகங்களை பட்டியலிடுகிறார். பல வீடுகளின் முன்னால் நாய்கள் இருக்கிறது எச்சரிக்கை என்ற பொருளில் "பிவேர் ஆப் டாக்ஸ்" என்று எழுதியிருப்பதைப்போல், அந்த புத்தகத்தின் இறுதி அத்தியாயத்திற்கு முந்தைய அத்தியாயத்தில், "பிவேர் ஆப் காந்தி" என்ற தலைப்பை அம்பேத்கர் எழுதியுள்ளார். தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்காக பல முயற்சிகள் எடுத்ததில் ஒன்றாகத்தான், 1930 ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்கு சென்று பல செய்திகளை எடுத்து வைத்தார். காங்கிரஸ் அப்போது கலந்து கொள்ளவில்லை. 1931 ஆம் ஆண்டு தான் காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின்படி வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொள்கிறார். (உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரி, இனி போராட்டம் நடத்த மாட்டோம் என்றும், வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்கிறேன் என்றும் போடப்பட்டதுதான் "காந்தி- இர்வின் ஒப்பந்தம்")



1930 ஆம் ஆண்டு வட்ட மேசை மாநாட்டிற்கு செல்வதற்கு முன்னால் காந்தியை சந்தித்து பல விவாதங்களை செய்து, நீங்கள் ஏன் எப்போதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகமே செய்கிறீர்கள் என்று கேட்டு விட்டுத்தான் அம்பேத்கர் மாநாட்டிற்குப் போனார். அந்த மாநாட்டில் அம்பேத்கர் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரிட்டிஷ் பிரதமர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமை தனித்தொகுதி உண்டு என அறிவித்தார். அப்படி கூடாது என்று போராடினார் காந்தி. இசுலாமியர் களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித் தொகுதியை ஏற்றுக்கொண்ட காந்தி, தாழ்த்தப்பட்ட வர்களுக்கு வழங்குவது, இந்துக்களை பிரிக்கும் சூழ்ச்சி என்றார். அம்பேத்கர் கேட்டார்... "இது வந்து தானா இந்துக்களை பிரிக்கப் போகிறது? நீங்கள் என்ன இணைத்தா வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எப்போதும் எங்களை அரவணைத்துக் கொண்டா இருக்கிறீர்கள்? எப்போதும் பிரிந்திருக்கிற நாங்கள், இப்போதும் பிரிந்திருந்து நாங்கள் பெறப் போகும் மேம்பாட்டை ஏன் தடுக்கிறீர்கள்?" என்று.

சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்த காந்தியை பார்த்து அம்பேத்கர் கேட்டார்...."நீங்கள் எப்போதாவது உங்களின் உச்சபட்ச கோரிக்கையான இந்திய நாட்டின் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறீர்களா? எங்கள் உரிமையை பறிப்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறீர்களே" என்று. "ஏழு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை விட, ஒரு காந்தியின் உயிர் பெரிதல்ல, உறுதியாக நில்லுங்கள்" என்று. அப்போது வெளி நாட்டில் இருந்த பெரியார் அம்பேத்கருக்கு தந்தி கொடுத்தார். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கண்மூடித் தனமான தாக்கு தல்கள் நடத்தப்பட்டதால் உரிமைகளை விட்டுக் கொடுக்க நேர்ந்தது. தொடர்ச்சியாக காந்தியின் சூதான போக்கினை எதிர்த்து நின்ற தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும்.

இந்த சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்களின் உரிமையைப் பற்றி, அவர்களுக்கான மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்வதற்காக வந்ததுதான் சைமன் கமிஷன். அதை வரவேற்றவர்கள் இந்தியா முழுவதும் இரண்டே தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் தான். எல்லோரும் எதிர்த்தார்கள். பெரியார் ஆதரித்து வந்த நீதிக் கட்சியும் எதிர்த்தது. அப்போது பெரியார் எழுதினார்... "சைமன் கமிஷனில் இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை என்ற காரணத்தைச் சொன்னார்கள். மிண்டோ மார்லி, மாண்டேகு சேம்ஸ்போர்டு வந்த போதெல்லாம் கேட்காமல், இப்போது மட்டும் ஏன் கேட்கிறாய்? ரவுலட் சட்டத்தை ரவுலட் மட்டுமா எழுதினான்? குமாரசாமி சாஸ்திரியும் சேர்ந்துதானே எழுதினான். அதனால் என்ன பலன் கிடைத்தது? அவன் வீட்ல நான்கு பேருக்கு வேலை கிடைத்தது. நல்லது வந்தா மட்டும் நீ ஏற்றுக் கொள்கிறாய். கெட்டது வந்தா வாயை மூடிக் கொள்கிறாயே. நல்ல வேளையாக இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை. நியமித்திருந்தால் பார்ப்பானை தான் நியமித்திருப் பான். அவன் எங்களுக்கு எதிராகத்தான் இருந்திருப் பான். எனவே இதை நான் வரவேற்கிறேன்" என்று எழுதினார்.

இரண்டாம் உலகப் போரில், இந்தியப் படையை ஆங்கில அரசு போரில் ஈடுபடுத்தியது. இதனால் இந்தியர்களுக்கு என்ன லாபம் என்று கண்டித்து காந்தி அறிக்கை விட்டார். எப்போதும் காந்தியை எதிர்க்கும் அம்பேத்கர் அப்போது வரவேற்றார். காந்தியார் கேட்ட கேள்வியில் நியாயம் இருக்கிறது வரவேற்கிறேன், அதே சமயத்தில் காந்தியாரிடம் எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. இந்திய விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டவர்களை ஈடுபடுத்து கிறீர்களே! அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன லாபம் இருக்கிறது என்று கேட்டார். அதைத்தான் இன்றும் சொல்கிறோம். தமிழ் தேசியம் பேசுகிற பல பேர் சிக்கல் இல்லாத பிரச்சினை என்பதற்காக பேசிக் கொண்டிருக்கிறார்கள். சாதி இல்லை என்று பேசினால்தான் சிக்கல் வரும். தமிழ் தேசியம் என்று சொன்னால் எந்த சிக்கல்களும் இல்லை. இந்திய நாட்டு விடுதலையின்போது அம்பேத்கர் கேட்டார். தமிழ்நாட்டிற்கு விடுதலை விரும்புகிற நாம் கேட்கிறோம், சாதி ஒழிப்பு இல்லாத தமிழ்நாட்டு விடுதலையில் நமக்கென்ன இருக்கிறது? சாதி ஒழிப்பை இலக்காகக் கொண்ட, அதை நோக்கமாகக் கொண்ட, அதை போராட்டத்தோடு இணைத்துக் கொண்ட தமிழ்நாட்டு விடுதலைக்கு நாம் போராடுவோம்.

பெரியார் கேட்ட தனித் தமிழ்நாடு, சாதி ஒழிந்த, பாலியல், பொருளியல் பேதமொழிந்த - பொது உரிமை கொண்ட பொதுவுடைமை சமத்துவ சமுதாயத்தைப் படைக்க வேண்டும் - தடையாகவே விளங்கும் பார்ப்பன, பனியா கும்பலிடம் இருந்து பிரிந்து, வடவர் சுரண்டலற்ற நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே பெரியார் கேட்ட தனிநாடு. சாதி ஒழிப்பே உண்மை விடுதலை என்பதை ஏற்றுக் கொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன். ●

## திராவிடர் விடுதலைக் கழக கிளைக் கழக துவக்க விழா



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கருவேப்பம்பட்டி, குதிரைப்பள்ளம் பகுதியில் 07.05.2017 ஞாயிற்றுக் கிழமையன்று மாலை5.00 மணிக்கு கிளைக்கழக துவக்கவிழா நிகழ்வும் பெரியாரின் கொள்கை விளக்க தெருமுனைப் பிரச்சாரமும் நடைபெற்றது. நிகழ்வின் முன்னதாக அப்பகுதியில் கழகத்தின் கொடியை தலைமைக் கழகப் பேச்சாளர் தோழர் கா.சு வேலுச்சாமி ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து பெரியாரின் கொள்கை விளக்க தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. இதில் காவை இளவரசனின் "மந்திரமா தந்திரமா" அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, பெரியாரின் கொள்கைகளை விளக்கி சிறப்பான உரை நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு கழகத்தோழர் மணி தலைமை தாங்கினார், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல், மாவட்ட பொருளாளர் அ.முத்துப்பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வை அப்பகுதியைச் சார்ந்த தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கொங்கு அமைப்புகளின் ஜாதி ஆதிக்கம் நிறைந்த இப்பகுதியில் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்நிகழ்வை அப்பகுதி பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று பெரியாரின் கருத்துக்களை கேட்டனர்.

## தி.வி.க. – தி.க. – த.பெ.தி.க. தோழர்கள் பங்கேற்பு: மயிலையில் கழகம் நடத்திய 'நீட்' எதிர்ப்பு பொதுக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட சார்பில் 17.05.2017 மாலை 6:30 மணியளவில் "நீட் தேர்வு விளக்க கூட்டம்" மயிலாப்பூர் பகுதியில் நடைபெற்றது. கழகத்தின் மயிலாப்பூர் பகுதி தோழர் மாரிமுத்து தலைமையில் பிரவீன், சஞ்சய், விஜயகாந்த், சரண், சிவா ஆகியோர் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் அருள்தாஸ் பகுத்தறிவு பாடல்களை பாடினார்.

அதையடுத்து, மருத்துவர் எழிலன், முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாளான மே 17 அன்று பாலச்சந்திரன் படத்தை திறந்து வைத்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. பின்பு பேசிய, மருத்துவர் எழிலன் மருத்துவ நுழைவுத் தேர்வின் மூலம் அரசு சுகாதார நிலையங்களை மூட நினைக்கும் மத்திய அரசின் போக்கைக் கண்டித்து சிறப்புரையாற்றினார். திராவிடர் கழகத்தின் சார்பாக முகிலன் பங்கேற்று மத்திய அரசிற்கு அடிபணிந்து கிடக்கும் மாநில அரசை கண்டித்து உரையாற்றினார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் வழக்கறிஞர் துரை அருண் சட்டத் துறையில் திணிக்க முற்பட்ட அதே தேர்வு முறைகளை இப்போது மத்திய அரசு மருத்துவ துறையில் நீட் தேர்வு முறையில் திணித்து கொண்டிருக்கிறது என்று விளக்கினார். தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக பேசிய குமரன் வர்ணாஸ்ரம அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தவிர்க்கப்பட்ட கல்வி உரிமை குறித்து உரையாற்றினார்.

நிறைவுரையாக பிரின்ஸ் கஜேந்திரபாபு, தமிழ்நாட்டில் ஆரம்ப காலம் முதல் சமீபத்திய காலம் வரை நடைமுறைபடுத்தப்பட்ட கல்விக் கொள்கைகள் பற்றியும் மத்திய அரசு தமிழர்களுக்கு மறுக்கப்படும் கல்வி உரிமை பற்றியும் சிறப்பான உரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியின் நிகழ்வுகளை மண்டேலா ஜான் தொகுத்து வழங்கினார். இறுதியாக, சுகுமார் நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தோழர் பாரூக் குடும்ப நிதி நன்கொடையாளர் பட்டியல்



| | | | |
|---|---|---|---|
| 1. | ஈரோடு சிவக்குமார் | - ரூ. | 10,000 |
| 2. | சேலம் சீனு | - ரூ. | 10,000 |
| 3. | அலக்சு விட்டல் | - ரூ. | 500 |
| 4. | அருள் | - ரூ. | 500 |
| 5. | உலகநாதன் | - ரூ. | 500 |
| 6. | பெங்களூர் சித்தார்த் | - ரூ. | 1,000 |
| 7. | ரவி | - ரூ. | 1,000 |
| 8. | தாந்தோனி | - ரூ. | 1,000 |
| 9. | செல்வ பாண்டியன் | - ரூ. | 1,000 |
| 10. | ஜீவா | - ரூ. | 2,500 |
| 11. | அருண் சதீசு (சென்னை) | - ரூ. | 1,000 |
| 12. | ந. தங்கவேல் | - ரூ. | 500 |
| 13. | பிரபு | - ரூ. | 500 |
| 14. | விருதுநகர் கணேசமூர்த்தி | - ரூ. | 1,000 |
| 15. | டாக்டர் சக்திவேல் (ஈரோடு) | - ரூ. | 5,000 |
| 16. | தமிழரசன் அப்துல் காதர் | - ரூ. | 5,000 |
| 17. | வினோத் கந்தன் | - ரூ. | 3,000 |
| 18. | பேராசிரியர் சரசுவதி | - ரூ. | 10,000 |
| 19. | சுந்தரம் (சென்னை) | - ரூ. | 1,000 |
| 20. | ஜே. விவேக் | - ரூ. | 5,000 |
| 21. | அ. சவுந்திரபாண்டியன் டாக்டர் | - ரூ. | 10,000 |
| 22. | இயற்கை கழகம், திருப்பூர் | - ரூ. | 40,500 |
| 23. | கல்பாக்கம் ஏ. ரவி | - ரூ. | 1,000 |
| 24. | குருபரன் | - ரூ. | 5,000 |
| 25. | குமாரபாளையம் தண்டபாணி | - ரூ. | 1,000 |
| 26. | பெங்களூர் மணியன் | - ரூ. | 1,000 |
| 27. | நடிகர் சத்யராஜ் | - ரூ. | 1,00,000 |
| 28. | ஸ்டாலின், வழக்கறிஞர் செங்கொடி | - ரூ. | 6,000 |
| 29. | காஞ்சிபுரம் திவிக தோழர்கள் | - ரூ. | 2,000 |
| 30. | எம்.ஜி.ஆர். நகர் தோழர்கள் | - ரூ. | 10,000 |
| 31. | எம்.ஜி.ஆர். நகர் துரைராஜ் | - ரூ. | 5,000 |
| 32. | ராஜீ, சங்கீதா | - ரூ. | 1,000 |
| 33. | தமிழ்நாடு மாணவர் கழகம் | - ரூ. | 3,500 |
| 34. | தென்சென்னை, தி.வி.க. | - ரூ. | 4,000 |
| 35. | செல்லையா முத்துசாமி | - ரூ. | 5,000 |
| 36. | குமரப்பா, வி.சி.க. | - ரூ. | 5,000 |
| 37. | எஸ்.எஸ். பிரபு புரட்சி பாரதம் | - ரூ. | 2,000 |
| 38. | வழக்கறிஞர் குமரதேவன் | - ரூ. | 3,000 |
| 39. | புதுவை தோழர்கள் | - ரூ. | 2,00,000 |
| 40. | சி. காளிமுத்து | - ரூ. | 2,000 |
| 41. | டைகர் பாலன் | - ரூ. | 5,000 |
| 42. | மருத்துவர் கருணாகரன் | - ரூ. | 2,500 |
| 43. | மருத்துவர் அறிவழகன் | - ரூ. | 5,000 |
| 44. | கிருட்டிணசாமி அம்பேத்கர் அறக்கட்டளை | - ரூ. | 2,000 |
| 45. | அக்ரி ஆறுமுகம் | - ரூ. | 500 |
| 46. | த.மு.மு.க. சார்பாக | - ரூ. | 2,000 |
| 47. | வழக்கறிஞர் ஸ்டாலின் | - ரூ. | 500 |
| 48. | திருப்பூர் சுசிலா | - ரூ. | 10,000 |
| 49. | விஜயகுமார் | - ரூ. | 25,000 |
| 50. | குமரி மாவட்டம் தி.வி.க | - ரூ. | 10,000 |
| 51. | தெ. மகேசு | - ரூ. | 5,000 |
| 52. | ப. தமிழ்வேலன் | - ரூ. | 3,000 |
| 53. | ந. விசயராகவன் | - ரூ. | 2,000 |
| 54. | அ. ஜாகீர் உசேன் | - ரூ. | 5,000 |
| 55. | நா. இளையராசா | - ரூ. | 5,000 |
| 56. | இரா. அன்பழகன் | - ரூ. | 5,000 |
| 57. | கே.ஜி.ஆர். உதயகுமார் | - ரூ. | 5,000 |
| 58. | கே.ஜி.ஆர். அசோக்குமார் | - ரூ. | 1,000 |
| 59. | ஜி.ஆர். செந்தில்குமார் | - ரூ. | 1,000 |
| 60. | நடராசன் | - ரூ. | 1,000 |
| 61. | நடராசன் | - ரூ. | 1,000 |
| 62. | மு.அன்பரசன் | - ரூ. | 1,000 |
| 63. | தெ. சுரேஷ் | - ரூ. | 1,000 |
| 64. | மா.க. கிருஷ்ணமூர்த்தி | - ரூ. | 500 |
| 65. | த. நன்மாறன் | - ரூ. | 2,000 |
| 66. | இனியவன் செந்தில், திருவாரூர் | - ரூ. | 10,000 |
| 67. | வா. ஜெயக்குமார், சென்னை | - ரூ. | 3,000 |
| 68. | ம. மகாலிங்கம் | - ரூ. | 1,000 |
| 69. | சம்பத்குமார் | - ரூ. | 2,000 |
| 70. | ஜோன் பிரதீப் | - ரூ. | 1,000 |
| 71. | ஈரோடு ஆபிரகாம் | - ரூ. | 10,000 |
| 72. | மேட்டூர் முல்லைவேந்தன் | - ரூ. | 10,000 |
| 73. | சங்கர் திவ்யா | - ரூ. | 2,000 |
| 74. | ஈரோடு தெற்கு மாவட்டம் 2-ம் தவணை | - ரூ. | 14,000 |
| 75. | வழக்கறிஞர் நிகோலஸ், இக்பால் | - ரூ. | 6,000 |
| 76. | ஈரோடு இனியன் பத்மநாபன் | - ரூ. | 1,000 |
| 77. | மைக்கேல் சார்லஸ் | - ரூ. | 1,000 |
| 78. | கோவை தோழர்கள் | - ரூ. | 35,000 |
| 79. | குருவாரெட்டியூர் நாத்திகஜோதி | - ரூ. | 5,000 |
| 80. | சேலம் நகர கழகம் | - ரூ. | 12,000 |
| 81. | ச.சிவக்குமார், குறிஞ்சி, தி.க. | - ரூ. | 1,000 |
| 82. | பொன். சந்திரன் (PUCL) | - ரூ. | 500 |
| 83. | ச. கார்த்திகேயன் | - ரூ. | 2,500 |
| 84. | தி.க. காளிமுத்து | - ரூ. | 500 |
| 85. | நங்கவள்ளி சிவக்குமார் | - ரூ. | 500 |
| 86. | பாண்டியநாதன் | - ரூ. | 1,000 |
| 87. | டாக்டர் மாணிக்கம் (வி.சி.க.) | - ரூ. | 1,000 |
| 88. | மதுரை சாதிக் அலி (நாத்திகர் பண்பாட்டு கழகம்) | - ரூ. | 10,000 |
| 89. | கண. குறிஞ்சி (ஈரோடு) | - ரூ. | 2,000 |
| 90. | சேலம் மேற்கு மாவட்ட கழகம் | - ரூ. | 29,500 |
| 91. | ராமசந்திரன் (மேட்டுப்பாளையம்) | - ரூ. | 500 |
| 92. | சு.சி. கலையரசன் (விசிக) | - ரூ. | 3,000 |
| 93. | மாணவர் நலகலகம் | - ரூ. | 10,000 |
| 94. | டி. செங்கோட்டுவேலன் | - ரூ. | 1,000 |
| 95. | எல். ரூபர்ட் | - ரூ. | 8,753 |
| 96. | கோதண்டராமன் | - ரூ. | 500 |
| 97. | சேது ஜெகதீசன் | - ரூ. | 10,000 |
| | 19.3.17 முதல் 25.4.17 வரை வரவு | - ரூ. | 3,81,594 |

**திருப்பூர் துரைசாமி, பொருளாளர், தி.வி.க.**

(பட்டியல் தொடரும்)

## திருப்பூரில் மே தின விழா, விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சி, பொதுக் கூட்டம்




திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 01.05.2017 அன்று காலை முதல் இரவு வரை முழு நாள் நிகழ்வாக விளையாட்டுப் போட்டிகள், பறை இசை, கலை நிகழ்ச்சி, பரிசளிப்பு விழா மற்றும் மே தினவிழா பொதுக் கூட்டம் திருப்பூர் இராயபுரம் மேற்கு திருவள்ளுவர் திடலில் மிக சிறப்பாக நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். காலை 10 மணிக்கு கழக கொடியினை கழகப் பொருளாளர் சு.துரைசாமி ஏற்றி இனிப்பு வழங்கி மே தின விழாவை துவங்கி வைத்தார். விளையாட்டு போட்டிகளை மாநகர செயலாளர்மாதவன் தொடங்கி வைத்தார்.விளையாட்டு போட்டிகளில் அப்பகுதி மாணவ, மாணவியர், பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மாலை 5 மணிக்கு காவை . இளவரசனின் ‘மந்திரமா, தந்திரமா?’ அறிவியல் விளக்க நிகழ்வு நடைபெற்றது. மேதின கருத்துத்துரையை தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி வழங்கினார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்ற மாணவ,மாணவியர்க்கு பரிசு வழங்கி பாராட்டி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வுக்கு திருப்பூர் மாவட்ட தலைவர் முகில் இராசு, மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, தெற்கு மாவட்ட அமைப்பாளர் இராமசாமி, மாநகர தலைவர் தனபால் மாநகர அமைப்பாளர் முத்து, நீதிராசன், அகிலன், கருணாநிதி, ஜெகதீசன், பல்லடம் ஒன்றிய செயலாளர் சண்முகம், புதுச்சேரி தீனதயாளன்,

கோபி மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, மேட்டூர், இராசிபுரம் சுமதி, பிடல் சேகுவேரா தோழர்கள் முத்துலட்சுமி பார்வதி, கோமதி, வசந்தி மணி, நாகராஜ் சாரதி, சாலினி, சத்தி, ந.சரவணன். இராமகிருட்டிணன் சாமிநாதன் சண்முகசுந்தரம், சரவணன், வளர் ஆகியோர் பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர்

## சித்தோட்டில் மாட்டுக் கறி விருந்து

திராவிடர் விடுதலைக் கழகம் , சித்தோடு கிளைக் கழகத்தின் சார்பில் சித்தோடு வாய்க்கால் மேட்டில் 14.05.2017 மாலை 6:30 மணியளவில் பிரபு தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் துவக்கத்தில் முருகேசன் பகுத்தறிவு பாடல்கள் பாடினார். அவரைத் தொடர்ந்து ஆத்தூர் மகேந்திரன் ‘மந்திரமல்ல தந்திரமே’ என்னும் அறிவியல் நிகழ்ச்சியை நடத்தினார். தமிழ்நாடு அறிவியல் மன்றத்தைச் சேர்ந்த வீரா கார்த்தி சமகால மாட்டுக்கறி அரசியல் பற்றியும் நீட் தேர்வைப் பற்றியும் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கோபி வேலுச்சாமி மூடநம்பிக்கைகள் பற்றி சிறப்புரையாற்றினார். இறுதியாக கிருஷ்ண மூர்த்தி நன்றியுரை கூற நிகழ்ச்சி நிறைவுற்றது. இக்கூட்டத்தில் இரசிபுரம் பிடல் சேகுவேரா, பள்ளிபாளையம் தோழர்கள் முத்துப்பாண்டி, தங்கதுரை, சரவணன், பாபு சென்னிமலை செல்வராஜ், சிவானந்தம், சித்தோடு தோழர்கள் கமலக்கண்ணன், பிரபாகரன், சத்யராஜ், சௌந்தர், கதிரேசன், சுர்ஜித் சேகர், ஜெய பாரதி, எழிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். இறுதியில் தோழர்களுக்கு மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது.

## கழகத் தலைவர் தலைமையில் விழுப்புரம் மாவட்ட கழக கலந்துரையாடல்

21.05.2017 மாலை 3 மணிக்கு விழுப்புரம் (மா) தி.வி.க மாவட்ட கலந்தாய்வு கூட்டம் சங்கராபுரம் வாசவி மஹாலில் நடைபெற்றது

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். தோழர்கள் க.ராமர், பெரியார் வெங்கட், கா.மதி, ந.வெற்றிவேல், இளையரசன், சி.சாமிதுரை, தீனா( புதுச்சேரி), ந.அய்யனார் (த.செ.கு) உரையாற்றினர். கழகத் தலைவர் சிறப்புரையாற்றினார். மா.குமார் நன்றி உரையாற்றினர். கூட்டத்தில் கழக இதழ்கள் ‘பெரியார் புரட்சி முழக்கம்’, ‘நிமிர்வோம்’ இதழ்களுக்கு சந்தா சேர்த்தல் மற்றும் கழகத்தின் அடுத்தகட்ட செயல் பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டு, விழுப்புரம் மாவட்டம் கிழக்கு, மேற்கு பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.

விழுப்புரம் கிழக்கு (மா) பொறுப் பாளர்கள்: இளையரசன் (மாவட்டத் தலைவர்), தினேஷ் (மா.செ), ஸ்ரீதர் (மா.அ), அழகு முருகன் (மா.து.த), பெரியார் ஜெயரக்சன் (மா.து.செ), விழுப்புரம் மேற்கு மாவட்டம், க. மதியழகன் (மா.த), க.ராமர் (மா.செ), சி.சாமிதுரை (மா.அ), ம.குப்புசாமி (மா.து.செ), மு.நாகராஜ் (த.அ.ம. மாவட்ட அமைப்பாளர்), வீ.வினோத் (த.மா.க. மாவட்ட அமைப்பாளர்), பாஸ்கர்( ரி.ஒ.அ), வே.ராஜேஷ் (ச.ஒ.அ).

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th May 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN